# HINDUSTAN
GROUP OF INSTITUTIONS
CHENNAI



Are you
# 18+?
IT'S
TIME
# TO GET VACCINATED

Here's how you can get your
## COVID VACCINE

1. Go to the COWIN portal - **www.cowin.gov.in**
2. Register yourself from 28th April, 2021 onwards.
3. Schedule vaccination appointment.
4. Vaccination for people from 18 yrs upto 45 yrs would be done at private Vaccination Centres and those Government Vaccination Centres where vaccine has been procured directly by the respective State Government.
5. Check the confirmation of appointment on registered mobile number.
6. Carry the appointment slip and photo ID card used for registration.

**#LargestVaccineDrive**

**Issued in Public Interest**

HINDUSTAN INSTITUTE OF TECHNOLOGY & SCIENCE (DEEMED TO BE UNIVERSITY)
KCG COLLEGE OF TECHNOLOGY
HIET HINDUSTAN INSTITUTE OF ENGINEERING TECHNOLOGY
ORIENT FLIGHTS AVIATION ACADEMY
HINDUSTAN INTERNATIONAL SCHOOL
HINDUSTAN FIRST GRADE COLLEGE
HINDUSTAN COLLEGE OF ARTS & SCIENCE

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

கோவிட்-19 தொடர்பான சந்தேகங்கள் மற்றும் அவசர உதவிகளுக்கு

**மாநில உதவி எண்கள்**

**104**
**044-2951 0400**
**044-2951 0500**
**94443 40496**
**87544 48477**

**சென்னை உதவி எண்கள்**

**044-4612 2300**
**044-2538 4520**

**கோவிட்-19 தொற்றுக்கான அறிகுறிகளான காய்ச்சல், இருமல், உடல் சோர்வு, வயிற்றுப்போக்கு, மூச்சுத்திணறல் இவை ஏதேனும் இருப்பின், பின்பற்ற வேண்டிய படிநிலைகள் :**

## 1 உங்களுக்கு தொற்றுக்கான அறிகுறிகள் இருந்தால், என்ன செய்வது ?

வீட்டுக்கு வீடு வந்து கோவிட்-19 சம்பந்தமான பரிசோதனை செய்பவர்களிடம் தகவல் தெரிவிக்கவும். அவர்கள் உங்களை அருகிலுள்ள சிறப்பு காய்ச்சல் முகாமிற்கு செல்ல வழிநடத்துவார்கள்



அருகிலுள்ள சிறப்பு காய்ச்சல் முகாமிற்கு சென்று பரிசோதனை செய்து கொள்ளவும்



அருகிலுள்ள கோவிட்-19 பரிசோதனைக்கான மாதிரி சேகரிப்பு மையத்திற்கு செல்லவும்



## 2 தொற்று உறுதி செய்யப்பட்டால், என்ன செய்வது ?

கோவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டால், பீதி அடைய வேண்டாம், வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ளவும். அருகிலுள்ள ஸ்கிரீனிங் சென்டருக்கு சென்று, நோய் தொற்றின் தீவிரத்தை பரிசோதனை செய்து கொள்ளவும்



பரிசோதனையில் கோவிட்-19 தொற்று உறுதி செய்யப்பட்டால்

| லேசான அறிகுறிகள் | | தீவிர அறிகுறிகள் |
|---|---|---|
| வீட்டில் தனிமைப் படுத்தப்படுவர் | கோவிட்-19 பாதுகாப்பு மையத்திற்கு அனுப்பி வைக்கப்படுவர் | மருத்துவமனை சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்படுவர் |

உதவிக்கு சுகாதாரப் பணியாளர்களை அணுகவும்



## கூடுதல் தகவல்கள்

1. கொரோனா நோய் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மருத்துவமனைகளில் உள்நோயாளிகள் சிகிச்சை தேவையில்லை. பாதிக்கப்பட்டவர்களில் 15 முதல் 25 சதவீதம் வரை மட்டுமே உள் நோயாளிகளுக்கான சிகிச்சை தேவைப்படும்.
2. தமிழ்நாட்டில் கொரோனா நோய்த்தொற்று படுக்கைகளின் எண்ணிக்கை, திரவ ஆக்ஸிஜன் கையிருப்பு, கோவிட் 19 தடுப்பூசிகள் மற்றும் தேவையான மருந்துகள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது. தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் தேவைப்படும் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் (TNMSC) மூலமாக வழங்கப்படுகிறது. படுக்கை வசதிகளை அதிகரிக்கவும், ஆக்சிஜன் மற்றும் மருந்துகள் தேவைகளை முழுமையாக வழங்கவும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.
3. கொரோனா தடுப்பூசிகள் கொரோனா நோய் பாதிப்பிலிருந்து நம்மை பாதுகாக்கும் மிகப்பெரிய ஆயுதமாகும். ஆகவே, தகுதியுடையவர்கள் அனைவரும் தவறாமல் தடுப்பூசி செலுத்திக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.
4. போதுமான தனி மனித இடைவெளி, முகக் கவசம் அணிதல் மற்றும் அடிக்கடி கைகளை சோப்பு மற்றும் கிருமி நாசினி கொண்டு கழுவுதல் ஆகியவற்றை பின்பற்றுவதன் மூலம் நோய்த்தொற்று பரவாமல் தடுக்கப்படுகிறது.
5. கொரோனா பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களும் தவறாமல் கொரோனா பரிசோதனை மேற்கொள்வதோடு மட்டுமில்லாமல் இரண்டு வாரங்களுக்கு வீட்டிலேயே கண்டிப்பாக தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
6. கொரோனா நோய்க்கான அறிகுறிகள் இருந்து கொரோனா பரிசோதனை மேற்கொள்பவர்கள் பரிசோதனை முடிவுகள் வரும் வரை வீட்டிலேயே தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
7. பொதுமக்கள் கோவிட் 19 தொடர்பான சந்தேகங்களுக்கு தெளிவு பெற 24 மணி நேர அவசர மருத்துவ அழைப்பு உதவி எண். **"104'**-ஐ அழைக்கலாம்.